## கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை
## மாத்தறை மாவட்டம்

---

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 08 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 15 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது சபைக்குச் சொந்தமான சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு மற்றும் பல சந்தர்ப்பங்களில் கொள்வனவு செய்திருந்த உபகரணங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 703,811 தொகையினை மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் கீழ் மூலதனப்படுத்த வேண்டும். | 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |
| (ii) | மீளாய்வாண்டிற்கான கணக்காய்வு கட்டணத்திற்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்படும் நிதிக் கூற்றில் சரி செய்வேன். |
| (iii) | மீளாய்வாண்டின் மாதாந்த ஒன்றிற்ற பெறுவனவு பொழிப்பின் படி கூட்டுத்தொகை ரூபா 25,899,257 தொகைக்கான ஏனைய உதவி வருமானங்கள் ரூபா 25,982,510 என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 83,313 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | மாற்றுப்பதிவு சீராக்கத் தவறியமையால் ஏற்பட்ட வித்தியாசம் ஆகும். |

### (ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 5,629,363 தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, கூட்டுத்தொகை ரூபா 70,065 இற்கான சமமின்மைகள் காணப்பட்டன. | உரிய மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முன்வரும் ஆண்டுகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### (இ) கணக்காய்விற்குத் தேவையான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 42,676,170 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தற்போது 02 பதிவேடுகள் முறைப்பிரகாரம் பேணப்படுவதுடன் எதிர்காலத்தில் ஏனைய பதிவேடுகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவு களுடன் செலவு விடயங்களின் உண்மையான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பற்றாக்குறைகள் தொடர்பாக காரணங்களைக் காட்டும் கூற்றொன்று கணக்கு களுடன் சமர்ப்பித்திருக்க வில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | தென் மாகாண உள்ளுராட்சி ஆணையாளரின் தபபா/15 இலக்க மற்றும் 2007 மார்ச் 19 திகதிய கடிதம் | சபைக்கு சொந்தமான காணி கள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் போது வழங்கிய பரிந்துரைகளை செயற்படுத்தியிருக்கவில்லை. | அறிவுரை கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | கணிப்பீட்டு சபையினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளை செயற்படுத்தும் போது காணி எல்லைகள் தொடர்பாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,429,138 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 112,566 தொகை ஆகக் காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,048,780 | 1,110,356 | 1,042,030 | 653,893 | 1,163,483 | 1,170,105 | 1,286,898 | 585,567 |
| வாடகை | 3,537,000 | 1,975,340 | 2,869,255 | 243,120 | 3,694,250 | 2,328,555 | 2,561,282 | 1,137,035 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 147,750 | 198,150 | 198,150 | 97,675 | 142,250 | 127,685 | 154,910 | 97,675 |
| ஏனைய வருமானங்கள் | 6,748,500 | 6,745,434 | 3,099,098 | 15,117,840 | 31,470,680 | 27,863,514 | 21,505,934 | 11,471,504 |
| மொத்தம் | 11,482,030 | 10,029,280 | 7,208,533 | 16,112,528 | 36,470,663 | 31,489,859 | 25,509,024 | 13,291,781 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டிற்கான நிலுவை வீதவரி ஆரம்ப மீதி ரூபா 430,852 தொகையாகக் காணப்பட்டதுடன், ரூபா 451,167 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் (கட்டணம் மற்றும் தண்டப்பணம் உடன்) ரூபா 882,019 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 374,858 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 507,161 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. | நிலுவை வீதவரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக தற்போது இறுதி அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| 2019 ஆண்டிற்கான திருத்திய ஆரம்ப நிலுவை ரூபா 154,715 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டையிடலுடன் (கட்டணம் மற்றும் தண்டப்பணம் உடன்) ரூபா 12,311 தொகை ஆகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 20,294 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 146,732 தொகை நிலுவை யாகக் காணப்பட்டது. வருட ஆரம்ப நிலுவை மீதியிலிருந்து மற்றும் சிட்டையிடலில் இருந்து 12 சதவீதம் அளவு குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | நிலுவை ஏக்கர்வரி விரைவாக அறவிடப்பட வேண்டும். | ஏக்கர் வரி செலுத்தாத நபர்களுக்கு கடிதங்கள் மூலம் அறிவிப்பதன் மூலம் மற்றும் வெளிக்கள பரிசோதனை மேற் கொண்டு தகவளை சரிசெய்த பின்னர் இந்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற் காக எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 ஏனைய வருமானங்கள்

#### நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,000 தொகை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 15,115,840 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | பெற வேண்டிய தொகையில் முத்திரைக் கட்டணங்களில் ரூபா 2,457,500 தொகை இதுவரை கிடைத்துள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் ஆகும். எனினும் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்க வில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்ட காலத் திட்டங்கள் தயாரித்திருக்காததுடன் 2020 ஆண்டு முதல் செயற்படும் விதமாக இடையறாமல் செயற்படுத்துவற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 11 திகதி திட்டக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த இலக்கம் 30/31/2017 கொண்ட அபிவிருத்தி அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் 369 சதுரமீற்றர்களுக்கான கட்டடம் ஒன்று நிர்மானிப்பதற்கு அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் 1098 சதுரமீற்றர்கள் கொண்ட கட்டடம் ஒன்று நிர்மானிக்கப்பட்டிருந்ததென வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன. இது தொடர்பாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் இலக்கம் 1597/08 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலின் உபபிரிவு V இன் 6(ii) பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | திருத்திய வரைபு கிடைத்த பின்னர் இலக்கம் 8/1597 மற்றும் 2009 ஏப்ரல் 17 ஆம் திகதிய வர்த்தமானியின் பிரகாரம் உபபிரிவு V இன் 6 II கீழ் மேவகை அங்கீகாரத்திற்கான உரிய தண்டப்பணம் அறவீடு செய்வேன். |
| (ஆ) | இலக்கம் 1597/08 மற்றும் 2009 ஏப்ரல் 07 ஆம் திகதி வர்த்தமானியின் உபபிரிவு V இன் 6(ii) பிரகாரம் உரிய அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த கூட்டுத்தொகை 306.6 சதுர மீற்றருக்கான 02 நிர்மான வேலைகள் தொடர்பாக குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்து முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன், சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த மேலும் 03 அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | தேவையான தொடர் நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் 03/02/02/01 கொண்ட மற்றும் 2017 திசெம்பர் 19 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் இடர் முகாமைத்துவ திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | கடிதத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டிற்காக இடர் முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கின்றேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்** | | |
| (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் காணப்பட்ட 02 வெற்றிடங்களை நிரப்புவதற்கும், 09 மிகைப் பதவியணியினை முறைப்படுத்துவதற்கும் மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவியணியின் மிகை பதவிகளை முறைப்படுத்துதல் மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | மிகைகளை முறைப்படுத்துவதற்காக நியாயப்படுத்தும் அறிக்கையுடன் சமர்பித்திருந்ததுடன் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு தேர்தல் அலுவல்கள் காரணமாக தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. |
| **ஊழியர் கடன்** | | |
| (ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 1,106,650 தொகைக்கான ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைக்கடன் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எழுத்து மூலம் அறிவித்துள்ளதுடன் இதுவரை பணம் கிடைத்தருக்கவில்லை. |

### 3.4 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத 14 நிறுவனங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்காததுடன் அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 61,600 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். | அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாவிடின் சட்ட நடவடிக்கை எடுக்க எதிர்காலத்தில் செயற்படுவேன். |
| (ஆ) இலக்கம் 2104 மற்றும் 2018 திசெம்பர் 28 ஆந் திகதிய வர்த்தமானியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறிவித்தல் பலகைகள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளதிருப்பதுடன் 2019 திசெம்பர் 13 ஆந் திகதி வரை மாத்தறை ஹக்மன பாதையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 57 அறிவித்தல் பலகைகள் தொடர்பாக ரூபா 82,525 இற்கான கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | வர்த்தமானியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டு முதல் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குச் சொந்தமான 18 கடைகளின் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். | உடன்படிக்கைகள் தொடர்பான சிக்கல்கள் அனைத்தும் விரைவில் சரி செய்வேன். |
| (ஈ) | உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் இலக்கம் மாறை/பபசகோ/இருந்து 06/01/2019 மற்றும் 2019 நவம்பர் 27 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசம் என பெயரிடுவதற்காக அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(i) பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தை வர்த்தமானியில் பிரசுரித்து அனைத்து ஆதனங்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் தொடர் நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத மல்வத்துகொட சனசமூக நிலைய கட்டடத்தை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். | எதிர்காலத்தில் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்த நடவடிக்கை எடுப்பேன். |

#### 3.5.2 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படும் 15 காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையினால் பயன்படுத்தப்படும் காணிகளின் உரிமையை உரித்தாக்க வேண்டும். | 03 காணிகளின் உரிமையை உரித்தாக்கியிருந்ததுடன் ஏனைய காணிகளை விரைவாக சபைக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். |

### 3.5.3 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான 01 ஏக்கர் 01 ரூட் 24.1 பர்சஸ் அளவான 11 காணிகளை ஆக்கபூர்வமான கருமங்களுக்காக ஈடுபடுத்தாமல் விளைவற்று காணப்பட்டன. | ஆக்கபூர்வமான கருமங்களுக்காக பயன்படுத்த வேண்டும். | குறுகிய கால பயிர்ச்செய்கைக்காக குத்தகைக்கு கொடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் கேள்வி அழைக்கப்பட்டதுடன், 03 காணிகளுக்கு மாத்திரம் வாடகையாளர்கள் விண்ணப்பித்திருந்ததுடன் அந்த 03 காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தததுடன் மீதியான காணிகளுக்கு அழைப்பு கிடைத்திருக்கவில்லை. |

### 3.6 ஒப்பந்த நிருவாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலாளரின் 2019 செப்தம்பர் 03 ஆம் திகதிய கடிதத்ததின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது பாதைகளுக்கு ABC போட்டு அபிவிருத்தி செய்யும் போது ரூபா 3,792 இற்கான விலை விகிதாசாரம்(ரேட்) பயன்படுத்தாமையால் 04 பாதைகளுக்காக ரூபா 74,011 தொகையாக செலுத்தப்பட்டிருந்தது. | உரிய விலை விகிதாசாரம் பயன்படுத்த வேண்டும். | பிடிபணம் விடுவிக்கும் போது கழித்துச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |